ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2003/25 - 2017 ජනවාරි මස 25 වැනි බදාදා - 2017.01.25
2003/25 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 5/1/2/20.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2013/PC/555.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னலை பிரதேச செயலாளர் பிரிவில், மெதபத்து கோரளை, மெதபத்து மேற்கு சிறு பிரிவில், கந்தானகெதர கிராமத்தில் அமைந்துள்ள, சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2015.12.17 ஆந் திகதிய இறுதி கிராம வரைபடத்தில் இல. 294, தாழ் இல. 07, பிற்சேர்க்கை இல. 9, எனக் காட்டப்பட்ட 1.1871 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட இரண்டு (02) காணித் துண்டுகள்.

**1. துண்டு இல. 52**

காணியின் பெயர்: கோன்கஹமுலஹேன அல்லது கஹட்டகஹமுலஹேன; விபரம்: வீட்டுத் தோட்டம், 30 - 40 வருட வயதிலான தென்னை மரங்கள் 112, 1 - 5 வருட வயதிலான தென்னை மரங்கள் 108, பலாக்காய் மரங்கள் 09, தேக்கு மரங்கள் 32, சூரியமார மரமொன்று, ஹல்மில்ல மரமொன்று, 02 நிரந்தரக் கட்டிடங்கள் 2, அத்திவாரம், சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறொன்று காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: மிரிஸ்ஸகே சுஜித் ஸ்டென்லி பிரணாந்து, இல. 178சீ, பொரளை வீதி, வென்னப்புவ; காணியின் விஸ்தீரணம்: 1.1442 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 53**

காணியின் பெயர்: கோன்கஹமுலஹேன அல்லது கஹட்டகஹமுலஹேன; விபரம்: வீதி; உரிமை கோருவோர்: மிரிஸ்ஸகே சுஜித் ஸ்டென்லி பிரணாந்து, இல. 178சீ, பொரளை வீதி, வென்னப்புவ, டப்ளியூ. ஏ. சிசிர குமார விஜேசிங்ஹ, கந்தானேகெதர, வடுமுன்னேகெதர, டப்ளியூ. ஏ. சரத் குமார விஜேசிங்ஹ, கந்தானேகெதர; காணியின் விஸ்தீரணம்: 0.0429 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு பன்னலை கிழக்கு பிரதேச செயலகத்தில் என் முன்பாக தோன்றும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். எஸ். விக்கிரமரத்ன பண்டார,
பிரதேச செயலாளர்,
பன்னலை.

பிரதேச செயலகம்,
பன்னலை.

2 - 384

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*